[19th September 1961

Ayan Villages—Resurvey

* 1618 *Q.*—Sri R. SRINIVASA IYER (on behalf of Sri K. R. VISWANATHAN) : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Government proposed to resurvey all the ayan villages in the State;

(*b*) if so, when; and

(*c*) if not the reasons therefor?

The Hon. Sri M. MANICKEVELU : (*a*) It is presumed that the hon. Member refers to re-survey of ryotwari villages. If so, the answer is no, Sir;

(*b*) Does not arise; and

(*c*) The necessity for resurvey of all the ryotwari villages has not been felt.

Sri R. SRINIVASA IYER : ஸார், அமைச்சர் அவர்கள் சில தினங்களுக்கு முன்னால் சொன்ன பதிலில் இந்த ரயத்வாரி கிராமங்கள் எல்லாம் சர்வே செய்து 40 வருஷங்களுக்கு மேல் ஆகின்றது என்று சொன்னார்கள். இப்போது பல சப் டிவிஷன்கள் வந்துவிட்டன, இதன் காரணமாக ரிக்கார்டுகள் எல்லாம் சரியாக இல்லாமல், ரெவின்யூ டிப்பார்ட்மெண்டிலிருந்து தீர்வை வசூல் செய்வதற்கும் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. ஒருவரிடமிருந்து வசூல் செய்யவேண்டிய தீர்வையை, இன்னொருவரிடமிருந்து வசூல் செய்யவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. ஆகவே இப்போது தற்காலிகமாக இருந்து வரும் சர்வே பார்டியை ஸ்திரமாக்கி இந்த ரயத்வாரி கிராமங்களில் எல்லாம் ரீசர்வே நடத்துவதற்கு சர்க்கார் ஏதாவது திட்டமிருக்கிறதா? இல்லையென்றால் இம்மாதிரியான ஒரு திட்டத்தை கொண்டுவர சர்க்கார் முன் வருமா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : மாகாணம் முழுவதிற்கும் சர்வே நடத்தவேண்டும் என்ற திட்டம் இப்போது இல்லை. எங்கே அவசியம் என்று தோன்றுகிறதோ அந்த இடத்தில் மட்டும் சர்வே நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக கன்னியாகுமரி ஜில்லா முழுவதும் ரீ சர்வே நடத்துவதற்கு திட்டமிட்டு சர்வே நடந்து வருகிறது. அந்த இடத்தில் 100 வருடங்களுக்கு முன் சர்வே நடந்திருப்பதாக சொல்லப்படுகிறது. அதோடு அங்குள்ள ஸ்டோன்கள் எல்லாம் வேறு விதமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. அதே போன்று கோயம்புத்தூர் ஜில்லாவில் நான்கு தாலூகாக்களில் சர்வே நடந்துவருகிறது. செங்கல்பட்டு ஜில்லாவில் பொன்னேரி தாலூகாவிலும் சர்வே நடந்து வருகிறது. மற்ற இடங்களில் எல்லாம் ரீசர்வே இப்போது நடத்தவேண்டிய அவசியமில்லை என்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

Protected Water-Supply Scheme

* 1619 *Q.*—Sri M. SELVARAJ (on behalf of Sri S. M. ANNAMALAI) : கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் போளூர் தாலூகாவில் தேசிய குடி தண்ணீர் திட்டத்தின்கீழ் சில கிராமங்களில் குடி தண்ணீர் வசதி செய்து தர வேண்டுமென்று திரு. ச. மொ. அண்ணாமலை, எம்.எல்.ஏ.-வின் கடித எண். எப். 7/49 1960ஆம் மேமீ 14 தேதி, சர்க்காருக்கு கிடைத்ததா ?

(இ) அப்படியானால், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

The Hon. Sri M. A. MANICKAVELU : (அ) It is presumed that the Member refers to his letter No. SMS F7/49, dated 7th May 1960. If so the answer is in the affirmative.